திருவண்ணாமலை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர்: திரு.து.கணேஷ்மூர்த்தி, எம்.எ., பி.எட்.,

ந.க.எண். 10246/அ1/2023, நாள். 27.09.2023

-----

பொருள் : நியமனம் - தமிழ்நாடு அமைச்சுப்பணி - பள்ளிக் கல்வித்துறை - இளநிலை உதவியாளர் நேரடி நியமனம் - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக்குழு 24.07.2022 அன்று நடைபெற்ற தொகுதி IV தேர்வு தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நிபந்தனைக்குட்பட்ட தற்காலிக நியமன ஆணை (Conditional Appointment) வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :

1. அரசாணை (நிலை) எண். 151, பள்ளிக் கல்வித் (ப.க.1.1) துறை, நாள். 09.09.2022.
2. சென்னை-03, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு செயலாளரின் கடிதம் எண். 1975/PSD.C2/2023, நாள். 25.08.2023.
3. சென்னை-06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண். 56703/அ4/இ1/2023, நாள். 21.09.2023.

**ஆணை :**

-----

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 24.07.2022 அன்று நடைபெற்ற தொகுதி IV தேர்வு மூலம் இளநிலை உதவியாளர் பணிக்குத் தெரிவு செய்யப்பட்டு பள்ளிக் கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கீழ்க்காணும் பணிநாடுநருக்கு அவரது பெயருக்கெதிரில் குறிப்பிடப்பட்டுள்ள பள்ளி/அலுவலகத்தில் பின்வரும் நிபந்தனைகளின் அடிப்படையில் இளநிலை உதவியாளராகத் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் வகை 14-ன் கீழ் தற்காலிகமாக நியமனம் செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| தேர்வாணையப் பட்டியலில் வரிசை எண். | பணிநாடுநரின் பெயர், பதிவெண் மற்றும் முகவரி | நியமனம் வழங்கப்படும் பள்ளி / அலுவலகம் |
|---|---|---|
| 288 | Reg.No.0701030057<br>VIJAY R<br>NO 578/3 METTU STREET, AKKUR CHEYYAR TALUK, THIRUVANNAMALAI DISTRICT, TAMIL NADU 631701. | அரசு மேல்நிலைப் பள்ளி, உக்கல், திருவண்ணாமலை மாவட்டம். |

1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மேற்குறிப்பிட்டுள்ள நபர் பணியில் சேரும் போது சிவில் சர்ஜன் தகுதிக்குக் குறையாத தகுதியுடைய மருத்துவ அலுவலரிடம் உடல் நலத்தகுதிச் சான்றினை உரிய படிவத்தில் பெற்று உடன் பணியில் சேருமாறு அறிவுறுத்தப்படுகிறது.

2. மாற்றுத் திறனாளிகள் சார்பில் அவர்களது ஊனத்தின் தன்மை மற்றும் சதவிகிதம் மற்றும் உடல் ஊனம் அவரது பணிக்குப் பாதிப்பை ஏற்படுத்துமா என்பன போன்றவை மாவட்ட மருத்துவ குழு மூலம் உறுதி செய்யப்பட வேண்டும்.

3. அரசாணை (நிலை) எண். 303, நிதித் (ஊதியக்கட்டு) துறை, நாள். 11.10.2017ன்படி பணியில் சேர்ந்த நாள் முதல் ரூ.19500-62000 (Level 8)ல் ஆரம்ப கட்ட ஊதியம் மற்றும் இதரப்படிகள் பெறத் தகுதியுடையவர் ஆவார்.

4. இப்பணியாளர் பங்குத்தொகை ஓய்வூதியத் திட்டத்தில் (Contributory Pension Scheme) மட்டும் சேரத் தகுதி உடையவர் ஆவார்.

5. சம்மந்தப்பட்ட நபர் இப்பணிநியமன ஆணை கிடைக்கப்பெற்ற 15 நாட்களுக்குள் பணியில் சேரவேண்டும். பணியில் சேருவதற்குக் கால அவகாசம் / பணியிட மாற்றம் கேட்டு அனுப்பப்படும் கோரிக்கை ஏற்கப்படமாட்டாது. நியமனம் செய்யப்பட்ட இடத்தில் உரிய காலத்தில் பணியில் சேராவிடில் நியமனம் பெற்றுள்ள நபரின் பெயரைத் தேர்வாணையத்தின் ஒப்புதல் அளிக்கப்பட்ட பட்டியலிலிருந்து நியமன அலுவலரால் நீக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்படுகிறது.

(த.பி.பா.)

6. பணிநியமன ஆணை பெற்ற நபர் பணியில் சேர்ந்தவுடன் அவரது வேலை வாய்ப்புப் பதிவு அட்டையை வேலை வாய்ப்பு அலுவலகத்தில் சரண் செய்யும் பொருட்டு சம்பந்தப்பட்ட அலுவலகத் தலைவரிடம் ஒப்படைக்க வேண்டுமெனத் தெரிவிக்கப்படுகிறது. அலுவலகத் தலைவர் சம்பந்தப்பட்ட நபரின் வேலைவாய்ப்புப் பதிவு அட்டையைப் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதல் பெற்றுக் கொள்ளவும்.

7. இத்தற்காலிக நியமனமானது மாண்புமிகு சென்னை / சென்னை உயர்நீதி மன்றத்தின் மதுரைக் கிளையில் இந்நியமனம் சார்ந்து நிலுவையில் உள்ள தொகுதி IV இன் கீழ் உள்ள பணிகளுக்கான நியமனம் தொடர்பான வழக்குகளின் முடிவிற்கு உட்பட்டதாகும்.

8. நியமனம் பெற்றுள்ள நபரின் கல்விச் சான்றிதழ்கள், சாதிச் சான்றிதழ் / தமிழ்வழிக் கல்வி பயின்ற சான்றிதழ் மற்றும் இதர ஆவணங்களைச் சரிபார்த்த பின்னரே பணியில் சேர்த்துக் கொள்ள வேண்டும் எனச் சம்பந்தப்பட்ட அலுவலகத் தலைவர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. நியமனம் பெற்றுள்ள நபர் முன்னிலைப்படுத்திய கல்விச் சான்றிதழ்கள், சாதிச் சான்றிதழ் மற்றும் இதர ஆவணங்கள் உண்மையானவை அல்ல என்றோ, விதிகளின் படி மதிப்பீடு செய்ய இயலாதவை என்றோ பின்னர் கண்டறியப்பட்டால், தனியருக்கு வழங்கப்பட்ட நியமனம் எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும்.

10. தனியரின் கோரிக்கை விண்ணப்பத்தின் அடிப்படையிலேயே இத்தற்காலிக நியமனம் வழங்கப்படுகிறது. தனியர் தேர்வாணையத்திற்கு இத்தேர்வில் கலந்து கொள்ளச் செய்த விண்ணப்பத்தில் கூறப்பட்டுள்ளவை ஏதும் பின்னர் தவறு எனக் கண்டறியப்படின் தனியரின் தேர்வு மற்றும் நியமனம் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

11. நியமனம் செய்யப்படும் பணியாளர் எஸ்.எஸ்.எல்.சி.-ல் தமிழை ஒரு பாடமாகப் பயின்று தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

12. இப்பணியாளர் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுவார். தகுதிகாண் பருவக் காலத்திற்குள் பவானிசாகர் அரசு அலுவலர் அடிப்படைப் பயிற்சியினையும், துறைத் தேர்வான தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் (தேர்வுக் குறியீட்டு எண். 172) தேர்விலும் கண்டிப்பாகத் தேர்ச்சி பெற வேண்டும். மேலும் தனியருடைய தகுதிகாண் பருவம் அதிகப்படியாக 5 ஆண்டுகள் வரை மட்டுமே நீட்டிக்கப்படும் எனவும், துறைத் தேர்வில் இக்காலத்திற்குள் தேர்ச்சி பெறத் தவறினாலும், பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியில் தேர்ச்சி பெறுவதில் (நிருவாகக் காரணம் தவிர்த்து) தனியரால் காலதாமதம் ஆகும் நேர்வுகளில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணிநிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 33 (4)இன்படி இப்பணிநாடுநர் அரசுப் பணியிலிருந்து பணி நீக்கம் செய்யப்படுவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

13. இந்நியமனம் இவரது தமிழ்வழிக் கல்வி பயின்ற சான்றிதழின் உண்மைத் தன்மை, சரிபார்த்தலுக்கு உட்பட்டதாகும் என்றும், இவர் சார்பாக அளிக்கப்பட்ட தமிழ்வழிக் கல்வி பயின்ற சான்றிதழ் உண்மைத்தன்மை அற்றவையெனத் தெரியவந்தால், இந்நியமனம் இரத்து செய்யப்படும். மேலும், சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், பெற்று வழங்கப்பட்ட ஊதியமும் பிடித்தம் செய்யப்படும். மேலும், உண்மைத்தன்மை அறியப்பட்ட பின்னரே இப்பதவியில் பணிவரன்முறை செய்யப்படும்.

தனியர் பணியேற்றவுடன் அவரது பணியேற்பு அறிக்கையினை உடன் அனுப்பி வைக்குமாறு சம்மந்தப்பட்ட அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

முதன்மைக் கல்வி அலுவலர்,
திருவண்ணாமலை.

பெறுநர்
VIJAY R
NO 578/3 METTU STREET, AKKUR CHEYYAR TALUK,
THIRUVANNAMALAI DISTRICT, TAMIL NADU 631701.

படி : செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை - 03.
படி : இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி), பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை - 06.
படி : தலைமை ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, உக்கல், திருவண்ணாமலை மாவட்டம்.
படி : கோப்பிற்கு.